# நான் பலியாக வந்தேன்

நான் பலியாக வந்தேன் - நீ
உனதாக ஏற்பாய் - நான்   - ( 2 )

பழைய இயல்பினைக் களைந்து - புது
உயர்வினை அடையவே வந்தேன்
புதிய வாழ்வு வாழ்ந்திட வா - 2
அருளினை வேண்டுகின்றேன்
உன் வாழ்வு என்னில் மலர
என்னையே தருகின்றேன்

(நான் பலியாக..)

உலகின் வாழ்க்கைப் பயணம் - என்
உள்ளத்தை வாட்டியே வதைக்கும்
அமைதி என்னில் அடைந்திட வா - 2
அலைகின்றேன் தவிக்கின்றேன்
உன்கரம் என்னை நடத்த
என்னையே தருகின்றேன்

(நான் பலியாக..)